பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.
மன்மத, வைகாசி–22,
திருவள்ளுவர் ஆண்டு – 2046.

<u>கடித எண்.20506/ஏ2/2015–1, நாள் 05.06.2015</u>

அனுப்புநர்
பி.டபிள்யு.சி. டேவிதார், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை –9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை –9.
அனைத்து துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள்/
மாவட்ட நீதிபதிகள் / குற்றவியல் தலைமை நீதிபதிகள்,
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.

அய்யா/அம்மையீர்,

பொருள்: அலுவலக நடைமுறை – கோப்புகளை முழுமையாக கூர்ந்தாய்வு செய்து தேவைப்படும் விவரங்கள் முதல்முறையிலேயே கோரப்பட வேண்டும் – அறிவுறுத்தங்கள் – வெளியிடப்படுகின்றன.

*****

அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகள் மற்றும் பணிசார்ந்த கருத்துருக்களை பரிசீலிக்கும்போது சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகள் சரியாக கூர்ந்தாய்வு செய்யாமல் பலமுறை விவரங்கள் கோரப்படுவதாக அறியப்படுகிறது.

2. அரசுப் பணியாளர்கள் கோரிக்கைகள் மற்றும் பணிசார்ந்த அதாவது கடவுச்சீட்டுபெற / அயல்நாடு செல்ல தடையின்மை சான்று பெறுவது, ஊதிய முரண்பாடுகளை களைவது, உயர்கல்வி பெற அனுமதி கோருவது, பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் போன்ற கருத்துருக்கள் தொடர்பாக அளிக்கப்படும் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்யும் போது தேவைப்படும் விவரங்கள் அனைத்தையும் முதல் முறையிலேயே கோரப்படவேண்டும். கூடுதல் விவரங்கள் தேவைப்படின் சம்பந்தப்பட்ட துறைகளின் இரண்டாம் நிலை அலுவலர்கள் நிலையில் விவாதிக்கப்பட்டு முடிவுகள் விரைவாக எடுக்கப்பட்டு அரசுப்பணியாளர்களுக்கு உரிய பதிலினை விரைவாக அளித்திட வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. மேற்காணும் அறிவுறுத்தங்களை தவறாது கடைபிடிக்குமாறு உரிய அறிவுரைகளை தங்களது சார்நிலை அலுவலகங்களுக்கு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

ம.சு. [signature] 8/6/2015
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

<u>நகல்:</u>
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை –9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை –9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ–II) துறை
சென்னை –9. (இணையதளத்தில் வெளியிடுவதற்கு)
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின்
அனைத்து பிரிவுகள் / அலுவலர்கள் சென்னை–9.
இருப்புகோப்பு / உதிரிகள்